# பசுமைக்கதிர்

(ஜூலை - டிசம்பர் 2021)

## வெளியீடு : வேளாண்மை அறிவியல் மையம்

கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.

தொலை பேசி : 04182-290551, 6384093303, மின் அஞ்சல் : kvktvmalai91@gmail.com, இணையதளம் : www.kvkthiruvannamalai.com

அலகு : 2 கதிர் : 47

### ஆசிரியர் குரல்

விவசாயச் சொந்தங்களுக்கு,

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தற்போது மத்திய மாநில அரசுகள் இயற்கை முறை விவசாய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அதிகளவு இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் பயன்பாட்டால் மண்வளம் சிதைந்ததோடு விவசாயிகள் எதிர்பார்த்த மகசூலை பெறுவது கடினமாகி வருகிறது. இதற்கு மண்வளத்தை பெருக்கி இயற்கைவழி வேளாண் முறைகளை கடைபிடித்து மகசூலை அதிகரிக்க தேவையான நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் நஞ்சில்லா உணவினை அளிக்க முடியும். மேலும் வருங்கால சந்ததியினருக்கு இம்முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு மட்டுமில்லாமல் இழந்த மண்வளத்தை மீட்டெடுக்க முடியும். நமது வேளாண் அறிவியல் மையமும் இயற்கை வழி வேளாண் முறைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள், பயிற்சிகள் மட்டுமின்றி பல்வேறு இயற்கை இடுபொருட்களை தயாரித்து வழங்கிவருகிறது. நமது மாவட்ட விவசாயிகள் இந்த முறைகளை பின்பற்றி சமூகத்திற்கு நஞ்சில்லா உணவையும் இழந்த மண்வளத்தையும் மீட்டெடுக்க கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்...

எஸ்.ரமேஷ், B.A.,LLB.
சிறப்பு ஆசிரியர்

## வயல் வெளி ஆய்வுத்திட்டம்

### ஏ.யூ-1 மற்றும் டி.கே.எம்-13 நெல் இரகங்களை மதிப்பீடு செய்தல்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் வயல்வெளி ஆய்வுத் திட்டத்தின் கீழ் செய்யார் வட்டம் ஏனாதவாடி கிராமத்தில் காரிப் பருவத்தில் 5 முன்னோடி விவசாயிகளின் வயல்களில் நெல் இரகங்களான ஏ.யூ-1 மற்றும் டி.கே.எம்-13 பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏ.யூ-1, டி.கே.எம்-13 ரகங்களானது விவசாயிகள் பயிரிடும் பி.பி.டி, என்.எல்.ஆர் நெல் ரகங்களோடு மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் ஏ.யூ-1 ஒரு எக்டருக்கு 6248 குவிண்டால் வரை மகசூல் தருவதாக உறுதி செய்யப்பட்டது. நிகர வருமானமாக ரூபாய் 42,591 வரை தருவதாக உறுதி செய்யப்பட்டது. எனவே ஏ.யூ-1 நெல் இரகம் விவசாயிகள் மத்தியில் பரவலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

## முதல்நிலை செயல்விளக்கங்கள்

### நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

திருவண்ணாமலை மாவட்டத்தின் முதன்மை பயிரான நெல் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் விவசாயிகள் அதிக மகசூல் இழப்பை சந்திக்கின்றனர். மேலும் நவீன பயிர்பாதுகாப்பு யுக்திகள் பற்றிய விழிப்புணர்வின்றி அதிக இரசாயன மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதனால் அதிக பண விரயமும், எஞ்சிய நச்சு நிறைந்த விளைபொருட்களுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இது சுற்றுச்சூழல் மற்றும் மனிதர்களுக்கு அதீத இடர்பாட்டை ஏற்படுத்துகிறது.



இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேளாண்மை அறிவியல் மையம் 2021-22 ஆம் ஆண்டில், வெம்பாக்கம் வட்டாரம், திருவடிராயபுரம் கிராமத்தில் 10 விவசாயிகளின் வயலில் முதல் நிலை செயல்விளக்கத்திடல் அமைத்து நவீன தொழில் நுட்பங்களை செயல்படுத்தியது. இத்திட்டத்திற்கு தேவையான முக்கிய இடுப்பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. செயல்விளக்கத்தின் முடிவில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் வெகுவாக குறைக்கப்பட்டது. மேலும் மகசூலானது 18.24 சதவீதம் கூடுதலாக கிடைத்ததாகவும், எக்டருக்கு ரூபாய் 16,425/- கூடுதல் இலாபம் பெற்றதாகவும் விவசாயிகள் கூறினர்.



## நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை





பயிர் சாகுபடியில் அதிக பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் விவசாயிகள் நிலக்கடலையில் விளைச்சல் இழப்பை சந்திக்கின்றனர். மேலும் வறட்சி, அதிக இராசயன பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல் போன்ற காரணங்களால் மகசூல் குறைகிறது. இதனால் மண்வளம், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. மேலும் சத்தான உணவிற்கு பதில் இரசாயனம் நிறைந்த விளைபொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேளாண்மை அறிவியல் மையம் 2021-22 ஆம் ஆண்டில், வந்தவாசி வட்டாரம் மும்முனி கிராமத்தில் 10 விவசாயிகளின் வயலில் முதல் நிலை செயல்விளக்கத்திடல் அமைத்து நவீன தொழில் நுட்பங்களை செயல்படுத்தியது. இத்திட்டத்திற்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. செயல்விளக்கத்தின் முடிவில் பூச்சி மற்றும் நோய்கள் சிறப்பாக கட்டுபடுத்தப்பட்டது. மேலும் மகசூலானது 20.66 சதவீதம் கூடுதலாக கிடைத்ததாகவும், எக்டருக்கு ரூபாய் 20,320/- கூடுதல் இலாபம் பெற்றதாகவும் விவசாயிகள் கூறினர்.

## கரும்பு வயலில் ஈரப்பதம் காட்டும் கருவி செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையம் 2021-22 ஆம் ஆண்டில், வந்தவாசி வட்டம் மருதாடு கிராமத்தில் கரும்பு வயலில் ஈரப்பதம் காட்டும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கரும்பு சாகுபடி செய்யும் 10 விவசாயிகளுக்கு இக்கருவி வழங்கப்பட்டது. இந்த ஈரப்பதம் காட்டும் கருவியினை மண்ணில் உள்ளே செலுத்தி அதிகமாக எரியும் வண்ண விளக்குகளின் அடிப்படையில் நீர் பாய்ச்சலாம். இது குறைந்த நீரில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதனால் 40 முறை நீர்ப்பாசனம் செய்வதற்கு பதிலாக 30 முறை நீர்பாசனம் செய்கின்றனர்.

## ஏ.டி.எல்-1 புதிய கேழ்வரகு இரகம் செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையம் 2021-22 ஆம் ஆண்டில், செய்யார் வட்டம் அரியூர் கிராமத்தில் ஏ.டி.எல்-1 கேழ்வரகு இரகம் காரிப் பருவத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதில் 10 விவசாயிகள் இந்த இரகத்தினை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 20.25 குவிண்டால் மகசூல் மற்றும் நிகர லாபமாக ரூ. 61,000/எக்டர் விவசாயிகள் பெற்று பயன் பெற்றனர்.

## நிலக்கடலையில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்





தொகுப்பு முதல்நிலை செயல் விளக்கத்திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் செய்யார் வட்டம் மேல்நகரம்பேடு கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு நிலக்கடலை இரகமான வி.ஆர்.ஐ-8 அறிமுகம் செய்யப் பட்டது. இத்திட்டத்தில் 10 எக்டா நிலப்பரப்பில் விவசாயிகள் சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 20.89 குவிண்டால் மகசூல் மற்றும் நிகர லாபமாக ரூ.1,01,439/- பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

## விரிவாக்க செயல்பாடுகள்

### உழவர் மாநாடுகள்

வேளாண் அறிவியல் மையமும், மாவட்ட வேளாண் துறையும் இணைந்து 14.07.21, 20.07.21 ஆகிய தினங் களில் பெரணமல்லூர் வட்டம் நம்பேடு மற்றும் வெம்பாக்கம் வட்டம் கீழ்நெல்லி கிராமங்களில் உழவர் மாநாடுகளை நடத்தியது. விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பண்ணை முறைகள் குறித்தும், மகசூல் அதிகரிக்க தேவையான தொழில்நுட்பங்கள், கால் நடைகளில் நவீன தொழிநுட்ப முறைகள் மற்றும் மதிப்பு கூட் டுதல் சம்பந்தமான விழிப்புணர்வும் விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது. வேளாண் அறிவியல் மைய தலைவர் திரு வே.சுரேஷ், மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் நம்பேடு மற்றும் கீழ்நெல்லி கிராமங்களை சேர்ந்த 116 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### மரக்கன்றுகள் நடும் விழா

வேளாண் அறிவியல் மையம் சார்பாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 93வது வருட நிறைவு நாளை கொண்டாடும் விதமாக ஈஷா அறக்கட்டளையுடன் இணைந்து 16.07.21 அன்று அறிவியல் மைய வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவிற்கு எற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஈஷா அறக்கட்டளை மண்டல மேலாளர் திரு. திலீப் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வளர்ப்பு முறை, பயன்கள் மற்றும் அந்தந்த பகுதிக்கேற்ற மரம் வளர்ப்பு முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர்கள் வேளாண் காடுகளின் சிறப்புகள் குறித்து உரையாற்றினார். நிகழ்ச்சியில் அறிவியல் மைய வளாகத் தில் 100 மரக் கன்றுகள் நடப்பட்டன. கீழ்நெல்லி கிராமத்தை சேர்ந்த 57 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


மின்னஞ்சல் : kvktvmalai91@gmail.com, Phone: 04182-290551, +916384093303





## உணவு மற்றும் தேசிய ஊட்டச்சத்து பிரச்சாரம்

வேளாண் அறிவியல் மையத்தின் சார்பாக ஆதனூர் மற்றும் வெம்பாக்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் 26.08.21, 28.09.2021 அன்று உணவு மற்றும் தேசிய பிரச்சார நிகழ்வு நடத்தப்பட்டது. உணவு மற்றும் ஊட்டச்சத்து பெறுதலில் தன்னிறைவு பற்றியும்அனைத்து வயதினரிடையே சமச்சீர் உணவுகளின் முக்கியத்துவம் பற்றியும் சமச்சீர் உணவில் காய்கறிகளின் பங்கு பற்றியும், ஊட்டச்சதது மேலாண்மைக்கு பால் மற்றும் இறைச்சியின் முக்கியத்துவம் பற்றியும் ஆரோக்கியமான உணவில் சிறுதானியங்களின் பங்கு பற்றியும் வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்கள் விளக்கினர். இதில பெருங்கட்டூர் ஆரம்ப சுகாதார அதிகாரி டாக்டர் ப. ஈஸ்வரி, ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவ அலுவலர் திரு கே. கலைவாணன், திருமதி கே.கே. சாந்தி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 172 வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள், அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கால்நடை மருத்துவ முகாம்கள்



வேளாண் அறிவியல் மையத்தின் சார்பாக 01.09.2021 மற்றும் 15.12.2021 ஆகிய நாட்களில், வந்தவாசி வட்டம் சித்தராகாவூர் மற்றும் ஆரணி வட்டம் ஏகாம்பரநல்லூர் கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்கள் நடைபெற்றது. குடற்புழு நீக்கம், தாது உப்புக்கலவை மற்றும் தடுப்பூசி ஆகியவை 180 கால்நடைகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 66 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## மண் வள முகாம்கள்

வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பாக மேல்சீசமங்கலம், வெங்களத்தூர், வேட்டகிரிபாளையம், பள்ளக்கொல்லை மற்றும் சதுப்பேரிபாளையம் ஆகிய கிராமங்களில் 05.07.21, 17.08.21, 19.08.21, 01.12.21 ஆகிய தேதிகளில் மண் வள முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 148 விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பது குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டு 95 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டடு மண் வள அட்டைகளும் வழங்கப்பட்டது. மேலும் 05.12.21 அன்று உலக மண் வள தினம், வெம்பாக்கம் வட்டார விவசாயிகளால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முகாம்களில் அறிவியல் மையத்தில் தலைவர் திரு.வே.சுரேஷ், மண் வேதியியலர் செல்வி தமிழரசி மற்றும் வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சியளித்தனர்.









## வயல்விழா



வந்தவாசி வட்டம் கீழ்செம்பேடு கிராமத்தில், முதல்நிலை செயல்விளக்கத் திட்டத்தின் கீழ் புதிய வீரிய கோ.எச்-1 ஒட்டு இரக பீர்க்கன் அறிமுகப்படுத்தப்பட்டு 10 முன்னோடி விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்த திட்டத்தின் கீழ் வயல்விழா 17.12.21 அன்று கீழ்செம்பேடு கிராமத்தில் நடத்தப் பட்டது. இதில் பயனாளி விவசாயிகள் தங்கள் கோ.எச்-1 பீர்க்கன் பற்றிய அனுபவங் களை பகிர்ந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் மையத்தின் விஞ்ஞானிகள் இந்த செயல் விளக்கம் சம்பந்தமான தொழில்நுட்ப விளக்கங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர். முன்னோடி பீர்க்கன் விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் 21 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## இயற்கைவழி வேளாண் குறித்த விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்

இயற்கை வழி வேளாண்மை பற்றிய விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 16.12.21 அன்று ஏற்பாடு செய்யப் பட்டது. நிகழ்ச்சியில் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மை குறித்த பல்வேறு தகவல்கள் தொழில்நுட்ப வல்லுநர்கள் விவசாயிகளிடத்தில் எடுத்து கூறினார். மேலும் வேளாண் தொழில்நுட்ப பல்கலை கழகத்தை சேர்ந்த பேராசிரியர் திரு.குமார் மற்றும் திருமதி உஷா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பங்கேற்ற 102 விவசாயிகளுக்கும் நாட்டுக் காய்கறி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது.







## கண்டுணர்வு சுற்றுலா



திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து 20 விவசாயிகள் மேட்டுப்பாளையத்திலுள்ள வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 31.12.22 வேளாண் அறிவியல் மையம் சார்பாக அழைத்து செல்லப்பட்டனர். வேளாண் காடுகள் மற்றும் அதன் முக்கியத்தும் குறித்தும் பேராசியர்கள் விவசாயிகளிடம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். வேளாண் காடுகள் பற்றி அமைக்கப்பட்டுள்ள பல்வேறு செயல்விளக்கத் திடல்களையும் பார்வையிட்டனர்.


மின்னஞ்சல் : kvktvmalai91@gmail.com, Phone: 04182-290551, +916384093303

## நெற்பயிரில் ஒருங்கிணைந்த தண்டுத் துளைப்பான் மேலாண்மை

நெற்பயிரில் உயிருள்ள உயிரற்ற காரணிகள் மூலம் கடுமையான மகசூல் இழப்பு (30-40 சதவீதம்) ஏற்படுகிறது. நெற்பயிரை பல்வேறு பூச்சிகள் தாக்கினாலும் குருத்துப் பூச்சியின் தாக்கம் அபரிமிதமாகும். இதனை தண்டு துளைப்பான் என்றும் அழைக்கலாம்.

### அறிகுறிகள்

குருத்துப் பூச்சி நாற்றங்கால், நடவு செய்த இளம் பயிர், தூர் கட்டும் பருவம் மற்றும் கதிர் பிடிக்கும் தருணங்களில் என அனைத்து பருவத்திலும் சேதத்தை ஏற்படுத்துகிறது. தாய் அந்துப்பூச்சிகள் இலைகளின் மேல் பகுதியில் முட்டைகளை குவியல் குவியல்களாக இடும். வெளிவரும் இளம் புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளை இட்டு உள்ளே சென்று உட்பாகங்களை கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குருத்து வாடி, பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். தூர்களின் எண்ணிக்கை குறைந்து தாக்கப்பட்ட பயிரில், மணிகள் பால் பிடிக்காமல் வெண் கதிர்களாக மாறுவதால் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

தாய் அந்துப்பூச்சி பிரகாசமான வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்துடன், முன் இறக்கை நடுவில் கரும் புள்ளியுடன் காணப்படும். சாதாரணமாக பெண் அந்துப்பூச்சி இடும் முட்டை குவியலில் 50-200 முட்டைகள் காணப்படும்.

### பொருளாதார சேதநிலை (சதுர மீட்டருக்கு)

- இளம் பயிரில் 2 முட்டை குவியல்கள்.
- வளர்ச்சி பருவத்தில் 10 சத தூர்களில் நடுக்குருத்து வாடல்.
- மணி பிடிக்கும் தருணத்தில் 2 சத வெண் கதிர்கள்.

### உழவியல் முறையில் பூச்சிக்கட்டுப்பாடு

- அறுவடை செய்தபின் தாள்களை மடக்கி உழுவதன் மூலம் புழுக்களையும் கூட்டுப் புழுக்களையும் அழிக்கலாம்.
- நடவின் போது வாடிய நடுக்குருத்துடன் கூடிய நாற்றுகளை தவிர்க்க வேண்டும்.
- நடுவதற்கு முன் நாற்றுகளின் நுனியை கிள்ளி முட்டைகளை அழிக்கலாம்.
- சிபாரிசு செய்யப்பட்ட அளவிற்குமேல் தழைச் சத்து உரங்கள் இடுவது கூடாது.
- ஏக்கருக்கு 2 விளக்குப் பொறிகள் மற்றும் 8 இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து தாய் அந்துப்பூச்சிகளை அழிக்கலாம்.

### உயிரியல் முறை கட்டுப்பாடு

டிரைகோகிரம்மா ஜப்பானிகம் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி என்ற அளவில் நடவு செய்த 30,37,44 மற்றும் 51 வது நாள் பயன்படுத்துவதன் மூலம் குருத்துப்பூச்சியை கட்டுப் படுத்தலாம். இது பூச்சியின் முட்டைபருவத்தில் அழிக்கவல்லது. இரசாயன முறையை விட எளியது, சிக்கனமானது. இதனால் சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.



### இரசாயண முறை கட்டுப்பாடு

பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை விட அதிகமாகும் போது ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 200 கிராம் (அ) தையோகுளோபிரிட் 200 மிலி (அ) புரோபனோபாஸ் 400 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

## புதிய வீரிய ஒட்டு மிளகாய் - அர்க்கா சான்வி (Arka Saanvi)

இந்த வீரிய ஒட்டு இரகம் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பெங்களூருவில் இருந்து வெளியிடப்பட்டது.

### சிறப்பம்சங்கள்



- பச்சை மற்றும் காய்ந்த மிளகாய் இரண்டிற்கும் ஏற்றது.
- செடிகள் மிதமான உயரத்தில் படர்ந்து வளரும் தன்மையுடயவை.
- காய்கள் 7-8 செமீ நீளமும், 1-1.2 செமீ அகலமும் இருக்கும்.
- முதிர்ச்சியடைந்த காய்கள் அடர் சிகப்பு நிறத்திலிருக்கும்.
- இலைச்சுருள் வைரஸ் நோய்க்கு எதிர்ப்பு சக்தி உடையது.
- மகசூல்: 7.5-8.75 டன்/எக்டர் (வற்றல்) (அ) 25.0 டன்/எக்டர் (பச்சை).

*****************


**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்(பொ.)

**ஆசிரியர் குழு**

திரு.ந.ரமேஷ்ராஜா, தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திருமதி.த.மார்கரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)
திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)
மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)
செல்வி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
செல்வி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்
செல்வி.ந.கே.தமிழரசி, திட்ட உதவியாளர் (ஆய்வகம்)

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி, அலுவலக உதவியாளர்
திரு.ஒ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)
திருமதி.அ.கி.கீதா, சுருக்கெழுத்தாளர்


**பெறுநர்**

திரு/திருமதி ..............................................................
..............................................................
..............................................................


**அனுப்புநர்**

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
வேளாண்மை அறிவியல் மையம்,
கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,
வெம்பாக்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.
தொலை பேசி : 04182-290551, +91-6384093303

மின் அஞ்சல் : kvktvmalai91@gmail.com
இணையதளம் : www.kvkthiruvannamalai.com